5.12.2018
DVC.14/17
RW1, Prabhakaran

எ.சா.1, இன்று மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கு.விசாரணை செய்யப்பட்டார்.

எனக்கும் மனுதாரருக்கும் திருமணம் பேசுசுவார்த்தை நடக்கும்போது நான் வெளிநாட்டில்இருந்தேன். சம்பந்டத பேச்சுவார்த்தையை என் அப்பாவும், அம்மாவும் தான் பேசினார்கள். அதனால் வரதட்சணை எவ்வளவு பேசினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரிய வாய்ப்பில்லை என்றால் என்அப்பாவும் அம்மாவும் வரதட்சணையே கேட்கவில்லைஅதை கொடுப்பதற்கு மனுதாரருக்கு வசதி வாய்ப்பு இல்லை. எங்கள் வீட்டில் வரதட்சணையாக 35 பவுனட நகையும், ஒரு வீடும் கேட்டார்க்ள என்றால் அவ்வாறு எதுவும கேட்கவில்லை. வீடு தர முடியாத காரணத்தினால் 40 பவுன் நகை நாங்க்ள கேட்டுக்கொண்டதற்காக போடபட்டது என்றால் சரியல்ல. என் மனைவி ஜேம்ஸ் மருத்துவமனையில் திருமணத்திற்கு முன்பு வேலை பார்த்து வந்தார். அங்கு வைத்து தான் என் மனைவிக்கு பிரசவம் நடந்தது. ஜேம்ஸ் மருந்துவமனையில் என் மனைவி வேலை பார்த்ததால் அங்கு பிரசவம் இலவசமாக பிரசவம் பார்க்கபட்டது என்று சொன்னால் தவறாகும்: நான் தான் செலவு செய்தேன். பிரசவ செலவிற்காக மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக மனுதாரருடைய தாயாருக்கு இரண்டு முறையாக 5000/=, 5000/= அனுப்பி உள்ளேன். அவ்வாறு நான் செலவு செய்வதற்காக ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் மனைவி பேரில் திருநெல்வேலியில் ஒரு மனை வாங்கி உள்ளேன். நான் வாங்கிய கிரைக பத்திரமானது ஒரு லட்ச ருபாய் என்றால் பத்திர பதிவிற்காக கொடுக்க பட்டது ஒரு லட்சம். ஆனால் நான் 3 லட்சம் ருபாய் கொடுத்தேன் என்னிடம் காட்டபடும் 23.05.2012 தேதியிட்ட என் மனைவி பெயருக்குள்ள கிரைய பத்திரம் ம.சா.ஆ. 3 ஆகும். அந்த சொத்திற்கு என் மனைவியை நான் அழைத்து செல்லவில்லை என்றாலும் அந்த இடம் எங்கு இருக்கிறது என்று என் மனைவிக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த மனையை என் மனைவி விற்று செலவு செய்ய முடியும் என்றால் அது ன் மனைவிக்காக வாங்கியது அல்ல என் குழந்தையின செலவிற்காக வாங்கியது. ஹீரோ பிளசர் என்ற வண்டியின் ஆர்.சி புக் என்னிடம் தான் இருக்கிறது என்றால் இல்லை மனுதாரர் வசம் உள்ளது. 17.05.2013 அன்று மனைவியை அவர் உடுத்திய துணியோடு நான் விரட்டி விட்டேன் என்றும் அதனால் என் மனைவி எந்தவொரு பொருளையும எடுத்து செல்ல வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. நான் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தபோது என் மனைவி என்னுடைய அம்மாவோடு தான் குடும்ப வீட்டில் இருந்து வந்தார் என்றால் சரிதான். என் அம்மா தான் என் மனைவியையும், குழந்தையையும் நன்கு பராமரித்து வந்தார் என்றால் சரிதான். என் அம்மா பெயருக்க தான் பணம் அனுப்பி அதை என் அம்மா செலவு செய்து வந்தார்ள ன்றால் என் அம்மா வெளியில் செல்வது கிடையாது ஏடிஎம் கார்டு என ் மனைவி கையில் தான் இருந்தது. வெளியில் செல்வதும் பணத்தை எடுத்துசெலவு செய்வதும் என் மனைவி தான். இந்த வழக்கிற்காக ஏடிஎம் கார்டு என் மனைவியின் கைவசம் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 5 லட்ச ருபாய் வரை ஏடிஎம் மூலமாக எடுக்க பட்டதற்கு எந்தவொரு ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். என் மனைவி குளச்சலில் வீட்டை வாங்குவதற்காக மனைவி நகையை அடமானம் வைத்து நான் 3 லட்ச ருபாய் வரை அடமானம் வைத்ததை மறைத்து சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனைவி மற்றும் குழந்தையின் பாஸ்போர்ட் அசல் என் கைவசம் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. அதேபோல ஸ்மார்ட்

கார்டும் என் கைவசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. அடிப்படை தேவைக்கு பயன்படுத்தகூடிய ரேசன் கார்டு, நான் வைத்துகொண்டு மனுதாரரை கஷ்டபடுத்துகிறேன் என்றால் சரியல்ல. குளச்சலில் SBI எனக்கு கணக்குள்ளது அதன் நகல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான் அது ம.சா.ஆ.8 ஆகும். இந்த வங்கீல் தான் என் மனைவி நகைகளை அடமானம் வைத்துள்ளேன் என்றால் இல்லை அது என்னுடைய நகை ஆகும். மனைவி நகை என்றால் சரியல்ல. மனுதாரரை நான் குடிக்காமல் அடிக்காமல் வாழ வைப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறதா என்றால் நானே குடிக்கமாட்டேன். மனைவியை பாதுகாப்பான இடத்தில வைத்து பராமரிப்பது கணவன் என்ற முறையில் என்னுடைய கடமை என்றால் என் வீட்டிற்கு வந்தால் நன்கு பராமரிப்பேன். குளச்சலிலுள்ள வீட்டில் என் மனைவி குழந்தை வாழ்வதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் அந்த வீட்டில் வாழ வைக்க முடியாது. அதில் மாத வாடகை வருகிறது. என் வீட்டில் அழைத்து சென்று வாழ தயார். குளச்சல் வீட்டில் மாடி வீட்டில் ஒரு ரூம் உளள்து என்றால் அது ஒரு சிறிய ரூம் ஆகும். அது பழைய பொருட்கள் போடப்பட்டுள்ளது அதில் வாழ முடியாது. குளச்சலில் சென்று மனுதாரரோடு வாழ எனக்கு விருப்பமில்லை. என்னுடைய குடும்ப வீட்டில் மனுதாரரோடு வாழ தயாராக உள்ளேன். மனுதாரர் சொல்வது போல நான் மனுதாரரை அடித்து துன்புறுத்திய காரணத்தால் தான் அவர் என்னோடு வாழ பயப்படுகிறார் என்றால் மனுதாருடைய தாயாருக்கே என்னை பற்றி நன்கு தெரியும். நான் மனுதாரரை அடித்தது கிடையாது.